மா ஸே துங் தோன்ற வேண்டுமானால் மடமை நீங்கவேண்டும்

அடிப்படையை மாற்றத்தான் அரும்பாடுபடுகிறோம்

எழுதவும் பேசவும் சுதந்திரம் அளந்தே தருகிறது சர்க்கார்!

விலங்குகளைப்போல் கம்யூனிஸ்டுகளை வேட்டையாடுவது நீதியா?

Phone No 450 Regd. No. M. 5458

விலை அரை அணா ... 5 பக்கம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (4—5—50) வெளியூர் (5—5—50) [இதழ் 243

மே தின விழாவில் ஆட்சியாளருக்கு அண்ணாத்துரை எச்சரிக்கை

"கும்பமேளாவுக்குக் கோடிக் கணக்கில் பணம் செலவு செய்து, ஆயிரமாயிரவர் ஆடையில்லாமல் ஊர்வலம் வர, லட்சக் கணக்கான மக்கள் கங்கையில் மூழ்கி மோட்ச சாம்ராஜ்யத்தின் கரை காணலாமென்ற மடமை நிரம்பியுள்ள நம் நாட்டில் ஒரு மாஸே-துங் பிறக்க முடியாது; மூடநம்பிக்கைகளை ஒழிக்க வால்டேருர், ரூஸ்ஸோவும் தோன்றிய பின்புதான், லெனின் வெற்றிகாண முடிந்தது; அடிப்படையை மாற்றியமைக்கும் ஒப்பற்ற பணியில்தான் திராவிட முன்னேற்றக் கழகம் ஈடுபட்டுள்ளது" என்று மேதின விழாவன்று கான்ரான்ஸ்மித் நகரில் கூடிய மாபெரும் கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் தோழர் சி. என். அண்ணாத்துரை கூறினார்.

தோழர் சி. டி. டி. அரசு தலைமையில் கூடிய கூட்டத்தில், தோழர் சி. என். அண்ணாதுரைக்கு முன்பு வங்கத்தின புரட்சிக்கவி, காலஞ்சென்ற கவியரசி சரோஜினிதேவியின் [torn]

மென்ற துணிவும் கொண்டுள்ளவர்களாக இருந்தால், அவர்கள் வங்கத்தில் பிறந்தாலும் சரி, சிந்துவில் பிறந்தவராக இருந்த வர் சரி [torn] தான் [torn]

சென்னை மாவட்டதிராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் தோழர் கே. கோவிந்தசாமி கூட்ட ஆரம்பத்தில், மே தின விழா மேதினியைப் பக்குவப் படுத்தியதை விவரித்தார்.

தோழர் சி. என். அண்ணாத்துரை ஆற்றிய சொற்பொழிவாவது :—

அன்புள்ள தலைவர் அவர்களே! தோழர்களே! இந்த ஆண்டு மே நாளில் திராவிட முன்னேற்றக் கழகத்துக்குத் தனிச் சிறப்பு ஏற்பட்டிருப்பதுடன், நல்ல வாய்ப்பும் கிடைத்துள்ளது என் நண்பரும் வங்கத்தின் புரட்சிக் கவிஞருமாகிய தோழர் அரீந்திரநாத் சட்டோபாத்யாயா இன்றையதினம் நம்மிடையே பேசவந்துள்ளார். வானத்தில் நல்ல நிலவு; கீழே நல்ல இருள், கூட்டம் நிகழ்ந்துபவர்கள் விளக்குகள் மீது விருப்பம்கொள்ளாத காரணத்தால், தொலைதூரத்தில் உள்ள பாதையில் மோட்டார் செல்லும்போது மினுக்கு விளக்கு உமிழும் வெளிச்சத்தில்தான காணமுடிகிறது கூட்டத்தின் அளவு.

உழைப்பாளர் தேவை!

கவிஞர் சட்டோபாத்யாயா கூறினார் தான் திராவிடனுமல்ல, முன்னேற்றம் உள்ளவனுமல்லவென்று; அது ஆராய்ச்சிக்குரிய விஷயம். சனாதனக் கோட்டையைத் தகர்க்கவேண்டுமென்ற எண்ணமும், மூடப்பழக்க வழக்கங்களை முறியடிக்கவேண்டு

தொழிலாளர் நிலைமையைப் பற்றி கவிஞர் விளக்கமாக எடுத்துச்சொன்னார்கள். சென்னையில் மட்டும் இன்று எட்டு இடங்களில் மேதின விழா நடைபெறுகிறது. தோழர். எஸ். சி. சி அந்தோணிப்பிள்ளை ஒரு இடத்தில்-தோழர் ஜி. ர ஜன்னர் மற்றொரு இடத்தில், தோழர் ஷெட்டி வேறு ஒரு இடத்தில் இதேநேரத்தில் பேசிக்கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸ் காரர்களும் பேசுகிறார்கள். அவர்கள் பேசுவது ராஜாஜி மண்டபத்தில்! ஆள் நடமாட்டமில்லாத இடத்தில்! நாம் சாதாரண மக்கள். அவர்கள் மாஜி மந்திரிகள், மந்திரிகள் ஆக முயற்சிப்பவர்கள் மேதினத்துக்கு மந்திரிகள் தேவையில்லை, மேதினியின் சரித்திரத்தை அறிந்தவர்கள் தேவை உள்ளம் உரம் கொண்ட உழைப்பாளிகள் தேவை. அவர்கள் இங்கு ஏராளமாக இருக்கிறார்கள்.

நம்முடைய தலைவர் பெரியார், என்னுடைய வழிகாட்டி இன்று புதுச்சேரியில் பேசுகிறார்: நெடுஞ்செழியன் கோவையில் பேசுகிறார், அன்பழகன் திருச்சியில் பேசுகிறார். மகிழ்ச்சிக்குரிய விஷயம் நமக்கு; மருட்சிக்குரியது சர்க்காருக்கு, மக்கள் சுதந்திரப் போராட்டத்துக்குத் தங்களைத் தயாராக்கிக்கொள்ள வேண்டும். கவிஞரவர்கள் உம்மால் ஆனதைச் செய்யுங்கள் என்று கூட்டத்தில் சவால்

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

தென்னாப்பிரிக்க மே தின விழாவில் கொந்தளிப்பு

—(0)—

16 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர் பலர் படுகாயமுற்றனர்

—(0)—

பொதுக் கூட்டத்துக்குத் தடை விதித்ததின் விளைவு!

ஜோகனஸ்பர்க், மே 2—

மே தினத்தன்று இங்கு ஏற்பட்ட கலகத்தின்காரணமாக, [torn] போலீசாரால் [torn] ப்பட்டனர். ஒரு [torn] குழந்தை உட்பட [torn] பட்ட மக்கள் படுகாயமுற்றனர்.

டிரான்ஸ்வால் பகுதியைச் சேர்ந்த தொழிலாளர்கள் உரிமை கோரி, அமைதியான முறையிலும், ஒழுங்காகவும். 'சுதந்திர தினம்' கொண்டாடினர்.

ஏறக்குறைய ஒரு லட்சம் தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்தனர். அன்று மாலை வரை வேலை நிறுத்தம் அமைதியாகவே, நடைபெற்றது ஆனால், போலீசார் பொதுக் கூட்டத்துக்குத் தடை விதித்ததினாலேயே கலகம் மூண்டது.

தென்னாப்பிரிக்கப் பாராளுமன்றத்தில், இக் கலகம் பற்றி விவாதிப்பதற்கென சபையை ஒத்திவைக்குமாறு, தோழியர் வி. எம். எல் பாலிங்கார் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்.

இத்தீர்மானத்தைச் சுதேசிப் பிரதிநிதிகளும், தொழிலாளர் பிரதிநிதிகளுமாக ஒன்பது பேரே ஆதரித்தனர் எனவே தீர்மானம் தோற்றது.

போக்ஸ்பர்க் நகரசபையில் வேலை பார்க்கும் தொழிலாளிகளில் 250 பேர் வேலைக்குப் போகாததால், வேலையினின்று நீக்கப்பட்டனர். அத்துடன் அந்தத் தொழிலாளரிடமிருந்து, நன்னடத்தை [...] னும் வாங்கப்ப[...] தாம். மற்றுமுள்ள சாலைகளில் வேலை [...] செய்தோருக்கு ஒரு நா[...] குறைக்கப்பட்டதாம்.

ஜப்பானில் மக்கள் சக்தி திரளுகிறது

—(0)—

முதலாளித்வ, ஏகாதிபத்திய வெறியர்கள் மிரளுகின்றனர்

டோக்கியோ, மே 2—

கம்யூனிஸ்டுகள் ஜப்பானைக் கைப்பற்றும் முயற்சிகளைமேற்கொண்டிருப்பதாக ஜெனரல் மக் ஆர்தர் இன்று அறிவித்தார்.

அவர் அங்ஙனம் கூற கீழ்க்கண்ட மூன்று நிகழ்ச்சிகளே முக்கிய காரணமாகும்.

1. ஓராயிரம் கல்லூரி மாணவர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டிருப்பது.

2 வரிவிதிப்பு மசோதாவை கண்டித்து, ஏராளமான டெலிபோன் செய்திகள் வந்து கொண்டிருப்பது.

3, 12 ஜப்பானிய ஆர்ப்பாட்டக்காரர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டிருப்பது.

என்பவைகளே என்று சொல்லப்படுகிறது. பொதுவாகப் பார்க்குமிடத்து, ஜப்பானின் மக்கள் சக்திதிரண்டு, ஏகாதிபத்யமுதலாளித்வ சக்திகளை எதிர்க்க ஆரம்பித்துள்ளன எனத்தெரிகிறது.

பிரிட்டிஷ்-எகிப்து உடன்படிக்கை

பிரிட்டிஷ் —எகிப்து உடன்படிக்கை விஷயமாக சம்பாஷணைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்பதற்கான அறிகுறிகள் எதுவும் காணப்படவில்லை. இருநாடுகளுக்குமிடையே சௌஜன்யமான உறவு நிலவி வருகிறது.

இந்தோசீனா மீது சீன கம்யூனிஸ்ட் நாட்டம்

லண்டன், மே 3

மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஹைனான் தீவு சீன கம்யூனிஸ்டுகளின் கைவசமாகிவிட்டது. அவர்களின் நாட்டம் இனி இந்தோசீனாமீதே விழும் என்று இங்குள்ள வட்டாரங்களில் கருதப்படுகிறது.

1941-ல் இந்தோசீனா [...] அதிகாரத்தைக் கொண்ட விச்சி சர்க்காருக்கு ஜப்பான் இந்நிலைக் கைப்பற்றிய பின் [...] தொல்லைகளைக் கொடுத்தன.

ஹைனான் முழுதும் கம்யூனிஸ்டுகள் வசமாயிற்று

—(0)—

சீன தேசீய சர்க்காரே ஒப்புக்கொள்ளுகிறது

தேய்பி, மே 2 -

ஹைனான் தீவு முழுவதும் கம்யூனிஸ்டுகள் வசம் சிக்கி விட்டது என்று, தேசிய சீன உத்தியோகபூர்வமாக இன்று அறிவித்துவிட்டது,

'ஏப்ரல் 22-ல் ஹைனான் தீவைப் பிடிப்பதில் வெற்றி முரசு கொட்டியது தேசிய சீன சர்க்கார். ஆனால் அந்த வெற்றியைத் தொடர்ந்தே கம்யூனிஸ்டுகளின் படையெடுப்பும், வெற்றியும் வெள்ளம்போல் வந்து விட்டது" என்று, செங்கியாங் என்று தேசிய சர்க்காரின் பொறுப்புள்ள அதிகாரி ஒருவர் கூறுகிறார்.

அவர் மேலும் கூறுகையில், இந்தப் போராட்டத்தில் கம்யூனிஸ்டுகளில் கொல்லப்பட்டவர்களும், காயம்பட்டவர்களும் சேர்ந்து 7191 பேர் என்றும், 1169 பேர் கைது செய்யப்பட்டனரென்றும், 800 படகுகள் மூழ்கின என்று கூறினார்.

மாலை மணி

சென்னை 4—5—50 வியாழக்கிழமை

இழிநிலை நீங்க!

தமிழகத்தில்,

தமிழ் கட்டாயப்பாடமில்லை! ஆனால்,

இந்தி கட்டாயப் பாடம்!

தாய் நாட்டில் தாய்மொழியான தமிழுக்கு இடமில்லை; ஆனால் வேற்று நாட்டின் வேண்டாத மொழிக்கு வேண்டிய இடம் அளிக்கப்பட்டிருக்கிறது பள்ளிப் பாடத் திட்டத்தில்!

செத்த மொழியான சமஸ்கிருதத்தின் சிதைவான இந்தி மொழி, தமிழகத்தில் அரியணை ஏற்றப்பட்டிருக்கிறது; நாட்டின் சொந்த மொழியான செந்தமிழ், தெருப்புழுதியிலே தள்ளப்பட்டிருக்கிறது!

அழகுள்ள—இன் மொழி கூறும் இல்லக்கிழத்தி அல்லற்குட்படுத்தப்பட்டு அலட்சியப்படுத்தப்பட்டிருக்கிறாள்; அழகற்ற—அசை மொழி கூறாத—ஆபத்துப் பயக்கும் பொதுமக்கள் குடித்தனம் பொறுப்பேற்று கும்மாளம் போகிறாள்!

இந்த விசித்திர நிலை, ஆனால் கொடுமை நிறைந்த காட்சி, திராவிடத்தில் இன்று ஏற்பட்டிருக்கிறது—இல்லை, வடவர் ஆதிக்கங்கொண்ட காங்கிரஸ் மந்திரி சபையினை ஏற்படுத்தப்பட்டிருக்

கட்டாயப் பாடம்!

ஆங்கிலம் கட்டாயப் பாடம்!

தமிழ் கட்டாயமில்லை!

சொந்த நாட்டில் சொந்த மொழிக்கு மதிப்பு இல்லை, மரியாதை இல்லை! இந்த வெட்கங்கெட்ட நிலையைத் தமிழரில் பெரும்பாலோர் இன்னமும் உணரவில்லை—உணர்வதாகவும் தெரியவில்லை. மந்திரி சபையில் தமிழர்கள் இருக்கிறார்கள்—எனினும் வடவர்க்கு அவரெல்லாம் அடிமை போயிருக்கிறார்கள்! ஆகவே தான், எதையும் விட்டுக்கொடுத்து, வடவரின் தயவிலே தம் அரசியல் வாழ்வை நடத்திச் செல்ல ஆசைப்படுகிறார்கள்! "விபீஷணர்கள்" இருக்கிற வரையிலே, "இராவணர்கள்" எப்படி நீதி, நேர்மை, மாசற்ற வீரம் இவைகளைக் கொண்டு மட்டுமே போரிட்டு வெற்றி பெற முடியும்?

தமிழகத்தில் தாய்மொழியான தமிழுக்கு ஏற்பட்டுள்ள தாழ்ந்த நிலை தான், மற்ற திராவிடக் குழு மொழிகள் வழங்கும் பகுதிகளில், அம்மொழிகளின் நிலைமையும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. திராவிடம் முழுமையுமே பரிகாசத்திற்குரிய பரிதாப நாடாக மாறியிருக்கிறது!

பள்ளிகளில் பயிலும் மொழிகள் சம்பந்தமாக, சென்னை அரசாங்கம் செய்திருக்கும் முடிவு, அதிகார பூர்வமாக இப்பொழுது வெளியிடப்பட்டுள்ளது.

முதல் பாரத்திலிருந்து ஆறாம்பாரம் வரையிலும் உள்ள வகுப்புகளைக் கொண்டுள்ள செகண்டரி பள்ளிகளில் மூன்று மொழிகள் கட்டாயமாகப் போதிக்கப்படும் என்று அரசாங்க அறிக்கை கூறுகிறது.

முதன் மொழியைப் பொறுத்தவரையில், பிரதேச மொழி கட்டாய முதல் மொழியாக இருக்க வேண்டிய கட்டுப்பாடு கிடையாது. பிரதேச மொழியையோ அல்லது தாய் மொழியையோ அல்லது புராதன மொழியையோ அல்லது வேறு எந்த இந்திய மொழியையோ முதலாவது கட்டாய மொழியாக எடுத்துக்கொள்ளலாம்,

என்று சர்க்கார் அறிக்கை திட்டவட்டமாகக் கூறுகிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் தமிழ் தான் பிரதேச மொழியாகும். தமிழ் பெரும்பாலோரின் தாய்மொழியாகவும், பிரதேச மொழியாகவும், தமிழகத்தில் ஆட்சி புரிய வேண்டிய அருகதையுள்ள மொழியாகவும் தமிழகத்தில் இருந்துவந்தும், தமிழ் கட்டாய மொழியாக இருக்க வேண்டிய அவசியமில்லை என்றே முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

தமிழகத்தில் வாழ்வோர் அனைவரும் தமிழைக் கட்டாயம் படித்துத் தீர வேண்டும் என்ற அவசியமில்லை! அவரவர்க்கு விருப்பமான வேறு மொழி எதையேனும் முதல் மொழியாக எடுத்துக்கொள்ளலாம்!

தாய்நாட்டில் தமிழ் விருப்பப் பாடமேயல்லாது கட்டாயபபாடமில்லை!

இதுதான் முடிவு!

மற்றப் பாடங்களைப் பயிற்றும் மொழியாகக் கொள்ளும் விஷயத்திலாவது, தாய்மொழித் தமிழுக்குத் தமிழகத்தில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை! மற்றப் பாடங்களையும் வேற்று மொழிகளிலேயே பயில விரும்புவோர், தமிழகத்தில் வாழ்ந்து கொண்டு பயிலலாம்! தமிழின் மூலமாகத் தான் பயிலவேண்டும் என்ற அவசியமில்லை

பிரதேச மொழியைத் தாய் மொழியாகக் கொள்ளாத மொழி சம்பந்தமான மைனாரிட்டிகளுக்குப் பயிற்றும் மொழி சம்பந்தமாக வேறு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

ஆதலால், பயிற்றும் மொழி தமிழ் மொழியாகத் தான் தமிழகத்தில் இருக்க வேண்டும் என்ற நியதியில்லை.

முதன் மொழியாகத் தமிழ் தான் இருக்க வேண்டுமென்பதில்லை. இரண்டாவது மொழியாக இந்தி தான் கட்டாயப் பாடமாக இருக்க வேண்டும். மூன்றாவது மொழியாக ஆங்கிலம் கட்டாயமாக இருக்கவேண்டும். பயிற்றும் மொழி விஷயத்தில் தமிழ் தான் அம்மொழியாக இருக்க வேண்டுமென்பதில்லை.

பாடத் திட்டத்தில் தமிழுக்கு எந்த இடத்திலும் கட்டாயமோ, முக்கியத்துவமோ, மதிப்போ, மரியாதையோ கொடுக்கப்படவில்லை. ஆனால் இந்திக்கும் ஆங்கிலத்திற்கும் அவையெல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன!

ஆங்கிலமாவது அவசியத்தையொட்டி—உலகியல் அறிவை யொட்டி—விஞ்ஞான அறிவைக் கருதி—வர்த்தக நோக்கத்தைக் கருதி—உலகோடு பழகும் பண்பை நோக்கிக் கட்டாயம் படித்துத் தீர வேண்டிய மொழியாக இருந்து வருகிறது. இந்தியைத் தமிழன் எதற்காகப் படிக்கவேண்டும்! அதன் தொடர்பு இல்லாமலே தமிழும், தமிழகமும், தமிழக மக்களும் இனிது வாழ முடியுமே!

இந்தத் தெளிவறிவைத் தமிழக மக்கள் என்று பெறப் போகிறார்களோ? என்றுவிழித்தெழப் போகிறார்களோ? என்று போரிட்டுத் தமிழுக்குப் பெருமை வாங்கித் தரப் போகிறார்களோ? அன்றுதான் தமிழகம் விடுதலை பெற்ற நாளாகக் கருதமுடியும்.

தீந்தமிழுக்கும் இழைத்திருக்கும் கொடுமையைக் களைந்தெறிய இக்கெட்டுமுள்ள திராவிடத் தீரர்கள் திரண்டெழுந்தால்தான் முடியும். தீங்குள்ள [illegible] நாமெதிர்ப்[illegible] திப்[illegible] தில்[illegible] கவிஞரின் [illegible] நெஞ்சிலே ஏந்தி, களம்புக திராவிடத் தீரர்கள் முயலுவார்களாக! அப்பொழுது திராவிடத்தைத் தீண்டியிருக்கும் இழிநிலை நீங்கும்—இன்னல் நீங்கும்—திராவிடத்தின் இன்பம் பொங்கும்! பொங்கும் இன்பத்தைப் பெற பொங்கி எழுவீர்களாக!

"ஊதியத்தை உயர்த்துக"

டோக்கியோ, மே 3—

ஜப்பானிலுள்ள ஜவுளி தொழிலாளர்கள் தங்கள் சம்பளங்களை அதிகரிக்கவேண்டுமென்று கோரியிருக்கின்றனர். சுமார் 35 மில்களை நடத்தும் பெரிய கம்பெனியான கானேகாபூசி கம்பெனி நிர்வாகிகள் இந்த நெருக்கடி சமயத்தில் சம்பள உயர்வு கொடுப்பது சாத்தியமில்லை என்றும், உற்பத்தி செலவு இன்னும் குறைக்கப்பட்டால்தான் ஏற்றுமதி வியாபாரம் நிலை நிற்கும் என்றும் கூறுகிறார்கள்.

$4\frac{1}{2}$ வருஷ காலமாக நல்ல லாபத்தில் வேலை செய்த பின்பும் அதிக சம்பளம் தொழிலாளர்களுக்குக் கொடுக்க முடியவில்லை என்றால், டைரக்டர்கள் ராஜிநாமா செய்துவிட்டு மில்களை மூடிவிடுவது நல்லது என்று தொழிலாளர் யூனியன் தலைவர் கூறுகிறார்.

ஞாயிறு இதழ்

ஞாயிற்றுக் கிழமைதோறும் அஞ்சல் நிலைய விடுமுறையாகையால் "மாலை மணி" ஞாயிறு இதழ் இனி வெளிவராது என்பதை தோழர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

மானேஜர்
"மாலை மணி"

மே தினத்தன்று தென்னாப்பிரிக்காவில் உரிமைப்போர்

நிறவெறி, யதேச்சாதிகார வெறிகளைக் கண்டிக்க கடையடைப்பு

ஜோஹென்னஸ்பர்க், மே 3—

வெள்ளையர், சுதேசிகள், இதர கருப்பு நிறத்தவர்கள் இவர்கள் தனித்தனியாக ஒதுக்கப்படும் இடங்களில்தான் வசிக்கவேண்டும் என்று ஏற்படுத்த மலான் சர்க்கார்கொண்டுவர உத்தேசித்துள்ள மசோதாவை தீவிரமாகக் கண்டித்து, மே தினத்தன்று தென்னாப்பிரிக்க இந்தியர்கள் கடையடைப்பு செய்தனர்.

இம்மசோதாவில் மிகவும் விபரீதமான ஷரத்துகள் அடங்கியிருக்கிறதென்றும், இவ்விஷயத்தை உடனே கவனிக்க வேண்டும் என்றும் அவர்கள் பண்டித நேருவுக்கும், லியாகத் அலிக்கும் அவசரத் தந்தி அனுப்பியிருக்கின்றனர்.

இம்மசோதாவிலுள்ள முழு ஷரத்துகளும் வெளியான பின்பு பீதி இன்னும் அதிகரித்திருப்பதாக 'ஜோஹென்னஸ்பர்க்' பத்திரிகை கூறுகிறது.

இம்மசோதாவிலுள்ள அம்சங்களை, இப்பத்திரிகையின் அரசியல் நிருபர் வெளியிட்டிருக்கிறார்.

சொத்து உடமை, ஆக்ரமிப்பு முதலிய விஷயங்களை உள்நாட்டு மந்திரி வைத்ததே சட்டம் என்ற நிலைமை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அவர் விருப்பப்படி எதுவேண்டுமானாலும் செய்யலாம் என்ற ஷரத்து இதில் காணப்படுகிறது. இந்த எதேச்சாதிகார தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்ய உரிமை அளிக்கும் எவ்வித ஷரத்தும் அதில் காணப்படவில்லை.

கவர்னர் ஜெனரல் தன்னிஷ்டம்போல் ஒரு பிரதேசத்தைக்குறிப்பிட்டு அதில் இன்ன நிறத்தவர்கள்தான் [illegible] திரவுக்பிறப் [illegible] [illegible] மென்றால் பர்மிட் பெறவேண்டுமாம்.

இந்த பர்மிட்டையும், மந்திரிதான் தன் இஷ்டப்படி அளிக்கவேண்டுமாம். ஆனால் அவர் இதற்கு முன் நிலமுறை ஆலோசனைப் போர்டை கலந்து ஆலோசிப்பாராம். இதில் 7 மெம்பர்கள் இருப்பர் இவர்களையும் மந்திரிதான் நியமிப்பாராம்.

இந்த போர்டு, இன்ஸ்பெக்டர்களை நியமிக்குமாம் இவர்கள் முன்னறிவிப்பு இல்லாமல் இரவிலோ பகலிலோ எங்கு வேண்டுமானாலும் யார்வீட்டில் வேண்டுமானாலும்போய் திடீரென்று சோதனை போடலாமாம்.

எந்ததஸ்தாவேஜுகளையும் புத்தகங்களையும் காட்டும்படி இவர்களுக்குக்கேட்க அதிகாரமுண்டாம்; இவர்கள் தாங்கள் கண்டுபிடித்த விஷயங்களை யாரிடமும் வெளிப்படாமல் மந்திரியிடம் தெரிவிக்கவேண்டுமாய் அல்லது போர்ட் மெம்பரிடம் தெரிவிக்கலாமாம்!

இந்த மசோதாவின் ஷரத்துள் ஒரு பிரதேசத்தில் 5 வருஷம் அமுல் நடத்தும் வரை இதற்கான பார்லிமெண்ட் சாங்ஷன் அவசியமில்லையாம்.

மசோதா நிறைவேறியபின் கேப், நேட்டால், டிரான்ஸ்வாலில் இந்த பிரிவு முறை அமுலுக்குக்கொண்டுவர உத்தேசிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

டாக்டர் சுப்பராயனுக்கு கவர்னர் பதவி?

புதுடில்லி, மே 2—

ஐ. மா. கவர்னர் தோழர் எச் பி மோடி பதவியிலிருந்து விலகி ஓய்வு பெறப்போவதால், அப்பதவிக்கு ராஜகுமாரி அமிர்தகௌரி அல்லது டாக்டர் சுப்பராயன் வரலாம் என்று சொல்லப்படுகிறது.

ஷாங்கேயில் பிரிட்டிஷ் கம்பெனிகளின் சங்கடம்

லண்டன், மே. 3—

ஷாங்கேயிலுள்ள சில பிரிட்டிஷ் கம்பெனிகள் கஷ்டத்தை சகித்துக் கொண்டு, வியாபாரத்தை நடத்துவதா அல்லது கஷ்டம்ஏற்படவதை பொருட்படுத்தாமல் "வெளியேறுவதா" என்ற இரண்டில் ஒரு முடிவுக்கு வருவதுபற்றி ஆலோசித்து வருகின்றன.

ஷாங்கேயில்மட்டும் 165000000 பவுன் பிரிட்டன், வியாபாரத்தில் மூலதனமாகப் போட்டிருக்கிறது. சீனாவில் போடப்பட்டுள்ள பிரிட்டிஷ் மூலதனம் 300,000.000 பவுன் இருக்கும்.

இனி நிலைமை சீர்ப்பட்டால்கூட லாபத்துடன் வியாபாரம் ஏற்படுத்த முடியாது என்ற நிலைமை சீனாவில் ஏற்பட்டிருப்பதாக சொல்லப்படுகிறது.

1951-ல் மக்கள் எண்ணிக்கை ஆரம்பம்

சென்னை மாகாணத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பு 1951 பிப்ரவரி 9-ல் ஆரம்பமாகி 28-ம் தேதி வரை நடைபெறுமென்று தெரிகிறது. அடுத்து, மார்ச் 1-ம் தேதி முதல் 3-ம் நாள் வரை கடைசி பரிசோதனை நடைபெறுமாம்.

கணக்கெடுப்பில் பெயர், குடும்ப தலைவருக்கு எவ்வகையில் உறவினர், ஜாதி, மதம், இனம், வகுப்பு முதலியன பற்றியும் விசாரிக்கப்படுமாம். வாக்குமூலங்களை அப்படியே பதிவு செய்து கொள்ள வேண்டுமென்றும், கணக்கெடுப்பு பதிவாளருக்கு [illegible]

[illegible]

குடியரசாகாதாம்

ஆட்டவா, மே 1—

காமன்வெல்த்தில் இருப்பதில் கனடா அதிருப்தியடையவில்லை என்றும் மலான் கூறுவதுபோல் கனடா மன்னரின் உத்தியோகப் பூர்வ தொடர்பு அறவேண்டும் என்று கேட்காது என்றும் கனடா சர்க்காரின் அதிகாரி ஒருவர் கூறினார்.

கனடாவிற்குக் குடியரசாகும் எண்ணமோ, காமன்வெல்த்தை விட்டு விலகும் எண்ணமோ கிடையாது என்று அவர் கூறினார்.

மன்னருக்கு இப்பொழுதுள்ள பட்டம் இக்காலத்துள்ள நிலைமைக்கு சரியானதாக இல்லை என்றும், அதை ஒரு திருத்தம் கொண்டு மாற்றிக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இனி நடப்பவை

பொள்ளாச்சி:—6-5-50 ஞாயிறு இரவு 9 மணி அளவில், திவ்யூர் தி. மு. வாலிபர் கழகத்தின் செயற்குழுக்கூட்டம் கழகக்கட்டிடத்தில் நடைபெறும். கழக நடைமுறை பற்றிய பல முக்கிய விஷயங்களை ஆலோசிக்க வேண்டியிருப்பதால், உறுப்பினர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்.

* * *

முகலிவாக்கம்:—இளைஞர் மன்றத்திறப்பு விழாப்பொதுக்கூட்டம் 5—5—50 வெள்ளிமாலை 5-30 மணிக்கு பறங்கிமலைக்கடுத்த முகலிவாக்கம் கிராமத்தில் நடைபெறும். தோழர் மா. சிங்காரவேலுபிள்ளை தலைமைவகிப்பார். தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன், கே. கோவிந்தசாமி, மா. இளஞ்செழியன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

மா ஸே துங் தோன்ற...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டார். 'சூளையில் ஆனதைச் செய்யுங்கள்' என்று கூறினார்கள். வாருங்கள் சேலம் சிறைச்சாலைக்கு' என்று சர்க்கார் கூற முடியும். அவர்களிடம் ஆள் வசதி இருக்கிறது; வாய்ப்பு இருக்கிறது; பிரசார பலம் இருக்கிறது. எல்லாம் இருந்தாலும் மக்கள் அச்சம் நீக்கப்படும் வரையில்தான், வீட்டுக்கும், ஜெயிலுக்கும் வித்தியாசம் தெரியாதிருக்கும்போதுதான். போலீஸ், பட்டாளம், ஜெயில் இருப்பதால் உரிமைப் போராட்டம் நடக்காதென்று எந்த சர்க்காரும் எண்ணக் கூட வேண்டாம். நாடு காடானாலும், உரிமை உணர்ச்சி குன்றாது குன்றியதில்லை வரலாற்றுப்படி கவிஞர் உரிமையுடன் எடுத்துக் கூறினார்; நல்லபுத்தி கேட்காத சர்க்கார் கேட்பார்களா?

நாட்டில் ஏற்பட்டுள்ள சுதந்திரக் கிளர்ச்சி, கொடூரமாக அடக்கப்படுகிறது. ஒரே பழிச்சொல், பொதுவுடமைக்காரர்கள்: மாஸ்கோ கூலிகள், துரோகிகள் கம்யூனிஸ்டுகள் என்று கூறித்தான் நம்மைக் கூட கருப்புக் கம்யூனிஸ்டுகள் என்று கூறுகிறார்களாம். அகராதியில் புதியவார்த்தையைச் சேர்த்ததற்காக மகிழ்ச்சி. கம்யூனிஸ்டுகளுக்கும் நமக்கும் உள்ள வித்தியாசம், அவர்கள் சமுதாயத்துறையைக் கவனிப்பதில்லை. பணக்காரன்-ஏழை ஒன்றுதான் அவர்கள் பிரச்சினை; பிறவி பேதத்தை அவர்கள் கண்டிப்பதில்லை. கம்யூனிஸ்டுகள் பலாத்காரத்தில் ந[illegible]ள்ளார்கள் என்று சர்க்கார் [illegible]

ஆதாரக [illegible] மறுத்து அறிக்கைவிடவில்லை. அதை விரும்பாததால் நாம் பிரிந்து நிற்கிறோம். வித்தியாசம் அதிகம் இல்லை; இருக்கக்கூடாது. இருப்பவையும் குறையும், வளராது. அதனால்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மேதின விழாக் கொண்டாடுகிறோம். இவ்வாண்டு திராவிட கழகம், திராவிட முன்னேற்றக்கழகம் ஆகிய இரண்டின் சார்பிலும் மேதின விழாக் கொண்டாடப்படுகிறது. கவிஞருக்குத் தமிழில் பேசுவதால் புரியாது; அவருக்கு நான் பின்பு விளக்கிக் கூறுகிறேன், நம் கழகத்தின் கொள்கைகளை.

அமெரிக்காவும் இந்தியாவும் கை குலுக்கும் போது...?

உழைப்பவன் - உண்பவன் உறவில், மத்தியில் சூறையாடும் தரகன் ஒழியவேண்டும். மற்ற நாடுகளில் காண முடியாத கொடுமைகள்-வேரறுக்கப்பட்டுத் தள்ளிவிடப்பட்ட கொடுமைகள் நம் நாட்டில் மலிந்துகிடக்கின்றன. லெனின் தோன்றுவதற்குமுன் ஒரு வால்டைர், ஒரு ரூஸோ நாட்டில் தோன்றியாகவேண்டும். போப்பின்கொடுமை போக்க, உலகம் தட்டையாக இல்லை, உருண்டையாக உள்ளதென்று விளக்க, அண்டத்தில் உள்ளவற்றை தூரதிருஷ்டிக் கண்ணாடியால கண்டு தெரிவிக்க, ஆழியின் ஆழத்தில் உள்ளதை அறிந்துகூற பல அறிஞர் தோன்றிப் பாதையைச் செப்பனிட்ட பின்புதான், புரட்சித்தேவன் லெனின் தோன்றி வெற்றிகாண முடிந்தது. நம் நாட்டில் சரித்திரம் நிலவ வேண்டுமானால், ஜாதிபேதம் ஒழிய வேண்டும்; மூடப்பழக்கவழக்கங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் மாஸ்கோ மணம் மாநிலத்தில் கமழும். நம்நாட்டில் எதிர்ப்பு புரட்சி-அதாவது ஆங்கிலத்தில் (Counter Revolution) என்று கூறுவார்கள், நடக்கிறது. நான் கேட்கிறேன், 1950-ல் அமெரிக்கவும், இந்தியாவும் கைகுலுக்கும் இந்த நேரத்தில் வடநாட்டில் கும்பமேளா! கோடிக்கணக்கான ரூபாய் செலவு, லட்சக்கணக்கான மக்கள் கூடினர், பலர் நிர்வாணமாக, கங்கையில் மூழ்கி மோட்சலோகத்துக்கு வழி காண முனையும்போது, மாஸே துங் எப்படித் தோன்றுவான் இந்நாட்டில்? வாழ்க்கை மாயை, ஆண்டவன் திருவடிகளே அடைக்கலம், என்ற அடிப்படை நம்பிக்கைமாறியாகவேண்டும். மக்கள் மனத்திலுள்ள வாழ்க்கைச் சலிப்பு மாற வேண்டும். உலகம் பெரியது, வாழத்தான் பிறந்துள்ளோம் என்பதை மக்கள் உணர வேண்டும், மானைப் புலிகொன்று வாழ்கிறது காட்டில். நம்மைச் சுரண்டித்தான் பிர்லாக்கள் பிழைக்க வேண்டும் என்ற நிலையிலிருந்தால், நாட்டுக்கும், காட்டுக்கும் என்ன வித்தியாசம்? மன மாற்றம் இப்பொழுது [illegible]

[illegible]பவர்கள் "இந்து" பத்திரிகை அன்றாட நிகழ்ச்சிகளைக் காணுங்கள். சீதா திருக்கல்யாணம்; பாரதப் பிரசங்கம், அனுமான் சேதுபந்தனம், என்றவாறு இருக்கும்! நகரின் பல பகுதிகளில் நடக்கும் 'உபந்நியாசங்கள்' இப்படி இருந்தால் இந்த நாட்டில் லெனின் பிறப்பானா? நல்ல விதைதான்; பாறையில் தூவினால் பயன்கிடைக்குமா? தஞ்சாவூர் தேமூர் வி. எஸ். தியாகராஜனுக்கு. சாமியப்பாவுக்கு வளப்பத்தைத் தந்த நெல், தம்பிரான் சடையில் பொன் பூக்க வைத்தநெல் பாறையில தூவினால் விளையுமா? கார்ல் மார்க்ஸ் தத்துவம் வேரூன்றுமா? கும்பமேளா பாறையைத் திருத்தி, திருத்தும் போது கஷ்டங்கள் பல ஏற்படும். வைதீக வல்லூறுகள் சீறும்; சனாதனச் சழக்கர்கள் சங்கடம் கொடுப்பர்; சர்க்கார் தம் வலிவைப் பிரயோகி. ஏமாந்த நேரத்தில் ஓட்டுபெற்ற பலம் தான் சர்க்காருக்கு. திராவிட கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் தேர்தலில் நின்றால், நான் தைரியமாகக் கூறுகிறேன் இன்றுள்ள மந்திரிகள் பலர் முக்காடுடன் உலவவேண்டி வரும். மக்கள் உரிமைப் போராட்டத்தில் தலையிட வேண்டாம்.

விஷப் பாம்பு போதுமே!

எழுத்துரிமை பேச்சுரிமையைச் சர்க்கார் ஏன் பறிக்க வேண்டும்? பேச்சுரிமை நாட்டில் இல்லை என்றால், எழுத்துரிமை இல்லையென்றால் அது தான் நாகரீக சர்க்காருக்குக் கேவலம். அளந்து பார்த்து, நிறுத்துப் பார்த்துத்தருகிறார்கள்! மே தினத்தில் தொழிலாளர் நலனைத்தவிரவேறு என்ன பேசிவிடுவார்கள்; ஏன் எழுத வேண்டும் சர்க்கார் ஒற்றர்? "ஜெயிலில் சும்மா இருக்கிறதே; பிடி அண்ணாத்துரையை, பிடி கவிஞரை, பேசுபவரையெல்லாம் பிடி; ஏன் பேசாமல் இருக்கிறீர்கள் என்று மற்றவர்களையும் பிடி என்று சர்க்கார் நடந்துகொள்கிறார்கள். இதுவரை எத்தனைபேர் சாக அடிக்கப்பட்டிருக்கிறார்கள். இதை விஷப்பாம்புகள் செய்யுமே? இதற்காகஆயிரமாயிரம் சம்பளம் வாங்கும் மந்திரிகள் ஏன்? "எட்டு கம்யூனிஸ்டுகள் சுட்டு வீழ்த்தப்பட்டார்கள்" என்று விலங்குகளை வேட்டையாடியது போல் கூறுகிறார்கள். 1942-ல் [illegible]ரையைக் கழற்ற ஸ்பானர் கொடுத்தவர்கள் நீங்கள்தானே!

சியாங்கே ஷேக்!

'எங்கள் நாட்டில் புலியைக் கொல்லவில்லை; கொடிய விலங்குகளைக் கொல்லவில்லை, 8 கம்யூனிஸ்டுகளைக் கொன்றோம்' என்று கூறுகிறார்கள். இதுவா ஆட்சி? நம்முடைய சர்க்கார், நம், நண்பர்கள் நடத்தும் சர்க்கார் என்ற காரணத்தால்தான். மாற்றியமைத்துக்கொள்ளுங்கள் என்று எச்சரிக்கிறோம். சீனாவில் சென்ற ஆண்டு சியாங், இன்று மாசேதுங்! பிரிட்டிஷ்காரர்களின், செல்லப்பிள்ளை, அமெரிக்காவின் ஆதரவு பெற்றவர், டாலர் உதவி தாராளமாகப் பெற்ற சியாங்கேஷேக் எங்கே [illegible] மோஸா தீவுக் [illegible] பல [illegible] டத [illegible] ன்று கூறுகிறார்க[illegible] அவரைப் படத்தில்தான் கண்டிருக்கிறேன்; தளர்ந்துதான் காணப்படுகிறது என் கண்ணுக்கு அவர் உடல் நிலை. ஜவஹர்லால்நேருவும் கவலை தோய்ந்த முகத்தோடு காணப்படுகிறார்! இவர்கள் பலம் என்னவானாலும், சியாங்பலத்துக்குமட்டம்தான் இன்று பார்மோசாவில் சியாங் மடங்கிக் கிடக்கிறார். அதனால்தான் எச்சரிக்கிறோம், பார் முழுவதும் புரட்சித் தீ பிடிக்காமுன, திருந்திக்கொள்ளுங்கள் என்று. நம் சர்க்கார், நம்முடைய தோழர்களால்நடத்தப்படும் சர்க்கார், நினைத்தால் நாம் அவர்களைத் தள்ளிவிட முடியும் என்றகாரணத்தால்தான் எச்சரிக்கிறோம்.

டாலர் ஏகாதிபத்தியம்

அயல்நாட்டு மூலதனம் கோடிக்கணக்காக வந்து குவிந்துகொண்டிருக்கிறது இந்தியாவில். டில்லியில் 'இந்து' பத்திரிகையின் நிருபராக உள்ள தோழர் சிவராவ் வேடிக்கையாகக் கூறுகிறார் 'பண்டிதநேரு அமெரிக்காவுக்குக் கருப்புயானைகள் அனுப்புகிறார்; அதற்குப்பதிலாக அமெரிக்கா வெள்ளை யானைகளை அனுப்புகிறது' என்று. அவர் வெள்ளையானைஎன்று கூறுவது அமெரிக்க டாலர்களைத்தான்! 14 அமெரிக்கர் கொண்ட தூது கோஷ்டியொன்று இந்தியாவுக்கு வந்தது. தாஜ்மகாலைக் கண்டு ரசிக்கவா, ஹிமாலய மலையின் உயரத்தைக் கண்டு வியக்கவா, கங்கையில் மூழ்கவா, காவேரியில் நீராடவா, இல்லை! இல்லவே இல்லை!! அவர்கள் வந்தது இந்தியாவில் எவ்வளவு பொன் இருக்கிறது, எவ்வளவு தேயிலைத் தோட்டங்கள் உள்ளன, தொழில் வளர்ச்சி எந்த அளவுக்கு வளர்ந்துள்ளது என்பதைப் பரிசீலனை செய்ய! நேரு அமெரிக்காவுக்குச் சென்றார்; அவருக்கு அமெரிக்கர்கள் கொடுத்த வரவேற்பை, ஓடலில் உட்கார்ந்து துளிர் வெற்றிலையைச் சுவைத்துக்கொண்டே தினமணி பத்திரிக்கையைப் படிப்பதில்தான் நம் காங்கிரஸ் தோழர்களுக்கு எவ்வளவு பூரிப்பு! நேருக்கு மட்டும் இது போன்ற வரவேற்பு வேறு யாருக்கும் நடக்காதென்று முடிவு. இன்று தோழர் லியாகத் அலிகானுக்கும் அதே வரவேற்பு கொடுக்க அமெரிக்கா தயராகிறது. ஆப்பிரிக்காவிலிருந்து ஒரு சுதேசித்தலைவர் சென்றால்கூட இதே வரவேற்பு அமெரிக்காவில் கிடைக்கும். ஏன்? நம்முடைய சங்கராச்சாரி தங்கப்பல்லக்கில் சென்றால் இதைவிட சிறிது அதிகமாகவே வரவேற்பு இருக்கும். 'இந்தியவில் உணவுப்பஞ்சம்', 'உணவு உங்கள் நாட்டில் வேண்டிய அளவுக்கு உள்ளது. மக்களும், மற்றைய விலங்கினங்களும் உண்டு மிகுந்ததைத் தந்தால் போதும், எங்கள்நாட்டு விவேகானந்தரை வேண்டுமானால் பதிலுக்குத் தருகிறோம்' என்று பண்டித நேரு கேட்டார். பிரதிநிதிகள் சபையில் பேசவேண்டுமா, ஏற்பாடு செய்கிறோம் செனெட்டில் பேசவேண்டுமா அட்டியில்லை; ஆனால் கோதுமை வேண்டுமென்றால் அது வேறு விஷயம் வர்த்தகனிடம் கேட்டுக்கொள் என்று அவர்கள் கூறிவிட்டார்கள்! வேண்டுமானால் ஒரு கப் காபி அருந்தவிட்டுச்செல் வட்டியை மட்டுக் குறைத்துக்கொள்ளாதே என்று நம்மார்வாடிகூறுகிறார். இதைத்தான் பெரியமார்வாடி கூறிவிட்டார் நேருவுக்கு. பண்டித நேரு, காந்தியாரின் சுவீகாரப் புதல்வன், அமேரிக்க பத்திரிகைகளால் அளவுகடந்த விளம்பரம் தரப்பட்டவன் கோதுமையைக் கொண்டுவரமுடியவில்லை. அப்படி இருந்தும் இந்தியா அமெரிக்கா முகாமில் சேரமுயல்கிறது தவறு, அவ்வாறு செய்ய முயலாதீர்கள் என்று கவிஞர் கூறினார். அவர் கூறுவதின் பொருள் ரஷியா முகாமில்இந்தியா சேரவேண்டுமென்பதல்ல.

நம் அடிப்படை!

முடிதரித்த மன்னர்கள், குருமார்கள், கோயில்கள், அர்ச்சகர்கள், பக்தர்கள் இருக்குமானால், ஒரு நாட்டின் முற்போக்கு தடைபடுகிறது. ஹைதராபாத்து நிஜாம், பரோடா மன்னர், முடியிழந்தும் பதவி இழக்காத பவநகர் மகாராஜா, லண்டனில் பவநகர், பாரிசில் சிற்றரசர்கள் இன்னும் எக்காளமிட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஜமீன்தார்களுக்குப் பெரும் பொருளை நஷ்டஈடாகக் கொடுத்து புதிய பணக்காரர்களைச் சர்க்கார் ஏற்படுத்தி இருக்கிறார்கள். கோயில்களில் பள்ளிகள் நடத்தலாமென்று மந்திரி பக்தவத்சலம் கூறியுள்ளார் சமீபத்தில். இது முற்போக்கான செய்கையானாலும்அந்த நோக்கத்தோடு கூறப்பட்டது அல்ல; பள்ளிகளைக் கட்டப் பணம் இல்லாததினால் ஏற்பட்ட பஞ்சப் புத்தியே!

பஞ்சாங்கம் பார்க்கும் பழைய புத்தி, கிருத்திகை[illegible] கும்பிடுவது, சித்திராபௌ[illegible]மிக்குப் பொங்கலிட்[illegible] படைப்பது ஒழியவேண்[illegible] சொக்கநாதர் கோயிலும், மீனாட்சி, காமாட்சிக் கோயிலும் இன்னும் நாட்டில் இருக்கின்றன! அவைகள் குறைந்தால்தான் நாடு வளரும். அதுதான் தி. மு. கழகத்தின் அடிப்படைக் கொள்கை.

(தொடரும்)

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

5-5-50

செய்யூர் :—சி. பி. சிற்றரசு.

6-5-50

புஞ்சைத்தலையூர் :—டி. கே. சீனிவாசன், ஜி. என். ராசு, என். ஈ. பாலகுரு, எஸ். அப்பாவு, பராங்குசம், ஏ. ஆர். சுப்பிரமணியம்.

7-5-50

செண்பகராயநல்லூர் :—சி. பி. சிற்றரசு.

டாடு பேசும் கூட்டத்திற்கு அனுமதி மறுப்பு

[illegible] ஜோஹன்னஸ்பர்க் மே. 3—

டிரான்ஸ்வால் இந்திய காங்கிரஸ் தலைவர் டாக்டர் டாடு பேசும் மாணவர்கள் கூட்டத்திற்கு அனுமதியளிக்க முடியாதென்று விட்வாட்டர்ஸ்ராண்ட் சர்வகலாசாலை உப அத்யக்ஷர் ரைக்ஸ் கூறிவிட்டார்.

தென்னாப்பிரிக்கசாலைகள் டாக்டர் டாடுவிற்கு பொதுக் கூட்டங்களில் பேசக் கூடாதென தடைவிதித்திருப்பதே தன் அனுமதி மறுப்புக்குக் காரணம் என்று அவர் தெரிவித்தாராம்.

இக் கூட்டம் பொதுக்கூட்டமல்லவென்றும் மாணவர் சங்க மெம்பர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர் என்றும் என்ன சொல்லியும் ரைக்ஸ் அவைகளைக் காதில் வாங்கவே மறுத்துவிட்டாராம்.

தி. மு. கழக பொதுக்கூட்டங்கள்

மேட்டுப்பாளையம்

மேட்டுப்பாளையம், ஏப். 28—
தி. மு. கழகத் துவக்கவிழாப் பொதுக்கூட்டம் பெரிய பலத் தடியில் ஆற்றினுள் நடத்தப்பட்டது. தோழர் ஹாஜாபீர் அவர்கள் தலைமை வகித்தார். தோழர் பரசாராமன் அவர்கள் திராவிடம் பண்ணிலையும் மற்றும் இயக்கப் பாடல்களையும் உணர்ச்சித் ததும்பப் பாடினார். தலைவர் முன்னுரைக்குப்பின் தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் 2 மணி நேரம் தி. மு. கழகமும் மக்கள் கடமையும் என்பது பற்றித் தெளிவாகவும், மிக விளக்கமாகவும் பேசினார். அடுத்தபடியாக தோழர் டி. வி. சண்முகசுந்தரம் அவர்கள் ஊரின் நிலைமையைப்பற்றிச் சிறிது நேரம் பேசியபின், தலைவர் முடிவுரை கூற செயலாளர் நன்றிகூற தோழர் பரசாராமன் அவர்களின் வாழ்க திராவிடம் என்னும் பாடலுடன் கூட்டம் மிக அமைதியாக இனிது முடிந்தது.

திருச்சி

திருச்சி, மே 2—
நகர தி. மு. க. வின் சார்பில் கருணாநிதி பார்க்குக்கு அருகில் அழகிரி திடலில் 1—5—50 திங்கள் காலை மேதின விழா தோழர் என். நெடுமாறன் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் பொன்மலை தோழர் ஜி. பார்க்குசம் தி.மு.க. கொடியை ஏற்றிவைத்து, மேதின விழாவும், நமது நோக்கமும் தி.மு.க. [illegible] லட்சியம் என்பது [illegible] சொற்பொழிவாற்றினார், தலைவர் முடிவுரையுடன் [illegible] முடிந்தது.

மேட்டூர் அணை

மேட்டூர் அணை, ஏப். 24—
திராவிட முன்னேற்றக் கழகத் துவக்கவிழா 24-4-50 அன்று மாலை பொதுஜன சேவா சங்க மைதானத்தில் தோழர் அ. இரத்தினசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தோழர் அ. இரத்தினசாமி அவர்கள் தமது தலைமையுரையில் தி. மு. க. நோக்கத்தை எடுத்துக்கூறினார்.

அடுத்துத் தோழர் அ. சித்தையன் அவர்கள் திராவிடமுன்னேற்றக் கழகத்தின் கொடியை ஏற்றிவைத்து, சொற்பொழிவு ஆற்றுகையில், சமுதாயம்பொருளாதாரம், அரசியல் இவற்றில் திராவிடம் அடைந்துள்ள தாழ்நிலை பற்றியும், திராவிடநாடு தனியே பிரியவேண்டியதின் அவசியத்தையும் வலியுறுத்தி சுமார் ஒருமணிநேரம் விரிவாகப் பேசினார்.

அடுத்துத் தோழர் க. அன்பழகன் எம். ஏ. அவர்கள் சுமார் 2-மணி நேரம், நாம் முன்னேற வேண்டிய அவசியம்—தி. மு. கழகத்தின் இலட்சியம் ஆகியவைப்பற்றிப் பேசினார். நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது. இரவுதலைவர்களுக்கும்பேச்சாளர்களுக்கும் கோபால் மாடர்ன் ஹோட்டல் சொந்தக்காரர் தோழர் கோபால்சாமி அவர்களால் சிறந்த முறையில் விருந்தளிக்கப்பட்டது.

ஆரணி

ஆரணி, மே 1—
29—4—50 அன்று தி. மு. கழகச் சார்பாக பொதுக் கூட்டம் நடந்தது. அதுசமயம் தோழர். பொ. பாலகிருட்டிணன் தலைமையில், தோழர் டீ. கே. சீனிவாசன் அவர்கள் பலத்த கைதட்டலுக்கிடையே நாஸ்திகன் யார்? என்பதைப் பற்றியும், திராவிட முன்னேற்ற கழகம் எப்படி வளர்ந்து கொண்டுவருகிறதென்பதையும்; காங்கிரஸ் காரர்களின் கண்மூடித் தனமான போக்கைக் கண்டித்தும், திராவிட நாட்டின் குறிக்கோள்களை பற்றியும் சுமார் 2. மணி நேரம் உணர்ச்சிததும்ப பேசினார். நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

மலேரியாவை ஒழித்துக் கட்ட ஐ. நா. நிதி உதவி

லண்டன், மே 3—
ஐ. நா. வைச் சேர்ந்த சர்வதேச சுகாதார ஸ்தாபனம் மலேரியா வியாதியை உலகிலிருந்தே ஒழித்துக்கட்டுவது என்ற முயற்சியில் இறங்கியிருக்கிறது. அதற்காக இவ்வாண்டு ரூ. 54,68,000 இந்த ஸ்தாபனம் செலவிடும்.

இந்தியாவிலும், இலங்கையிலும் உள்ள மலேரியா தடுப்பு ஸ்தாபனங்களை பலப்படுத்த இத்தொகையில் ஒரு பகுதி செலவிடப்படும். தென்கிழக்கு ஆசியாவிலிருந்து இந்த வியாதியை ஒழிக்க தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மலேரியா தடுப்பு விஷயமாக ஆலோசனைகூற, நிபுணர்களை இந்த ஸ்தாபனம் தயாராக வைத்திருக்கிறது. எந்த சர்க்கார் வேண்டுமானாலும் இவர்கள்சேவையை ஸ்தாபனத்தைக் கேட்டு பெற்றுக்கொள்ளலாம்.

நாயை முத்தமிட்டவன் மீது நாயகி கோபம்!

நியூயார்க், மே 3—
தினமும் காலையில் எழுந்தவுடன் தன் நாய்க்கு முத்தம் கொடுத்து விட்டு மனைவியைத் தட்டிக்கொடுப்பது ஒருவருடைய வழக்கமாம். இதைச் சகிக்கமாட்டாத அவர் மனைவி அவருடன் விவாகரத்து செய்துகொண்டுவிட்டாள்.

இதைத் தவிர எதெதற்கெல்லாம் விவாகரத்து ஏற்படுவது மிக சகஜமாக இருக்கிறது. புருஷனுக்கென்று வைத்திருந்த பீரை மனைவி குடித்துவிட்டாளாம் இதற்காக விவாகரத்து.

ஒரு புருஷன், மனைவியை காரில் வைத்து ஓட்டி ரயில்வே தண்டவாளத்தின் நடுவே அவளைக் காரிலேயே விட்டுவிட்டுப் போய்விட்டானாம். இதற்காக மனைவி விவாகரத்து செய்து கொண்டுவிட்டாள்.

டாஞ்சியரில் தங்கம்

டாஞ்சியர், மே. 3—
டாஞ்சியரின் சர்வதேச அந்தஸ்து, அங்குண்ட்ரோல்கள், வரி முதலியவை இல்லாமை இவை களெல்லாம் உத்தேசித்து இங்குள்ள பாங்கிகளில் ஐரோப்பாவின் பல நாடுகளிலிருந்து தங்கம் பத்திரப்படுத்தப்பட்டுவருகிறது.

இப்பொழுது டாஞ்சியரிலுள்ள தங்கத்தின் விலை மதிப்புமட்டும் ரூ. 39,00,00,000 என்று தெரிகிறது.

மாலை மணி

1960-ல் விமான வேகம்

நியூயார்க், மே. 3—
லண்டனைவிட்டு எந்த மணிக்கு புறப்படுகிறோமோ நியூயார்க்கில், அதே மணிஅடிக்கும்போது விமான மூலம் போய் சேருவது 1960-ல் சாத்தியமாகலாம் என்று கூறப்படுகிறது. இரண்டு நகரங்களுக்குமிடையே உள்ள மணி வித்தியாசம் 6 மணி அதாவது லண்டனிலிருந்து நியூயார்க்கிற்கு 6 மணி நேரத்தில் போய்ச் சேரலாம். இப்படிப் போய்ச் சேர வேண்டுமென்றால் மணிக்கு 500 மைல் வேகத்தில் விமானம் பறக்க வேண்டும்.

கெய்ரோ டமாஸ்கஸ் டெலிபோன் இணைப்பு

டமாஸ்கஸ், மே 3—
டமாஸ்கஸுக்கும், கெய்ரோவுக்குமிடையே அகாபா வழியாக டெலிபோன் இணைப்புகள் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இந்த இணைப்புகளில் சில பின்னர் இராக் இரான்வரை விஸ்தரிக்கப்படும் என்றும் சொல்லப்படுகிறது.

கோவேறு கழுதைகள் சங்கம்!

மெக்ஸிகோ ஸிட்டி, மே 3—
கோவேறு கழுதைகளின் நலனைப் பாதுகாக்க, கோவேறு கழுதைகள் சங்கம் ஒன்று புரோகிரெஸ்ஸோ துறைமுகத்தில் ஏற்படுத்தப்பட்டது.

ஆனால் மெக்ஸிகோ சர்க்கார் இதை பூர்வமாக பதிவு செய்ய மறுத்துவிட்டது. கோவேறு கழுதை ஓட்டிகள் சங்கம் ஏற்படுத்திக் கொள்வதைப்பற்றி ஆட்சேபணையில்லை என்றும், ஆனால் கோவேறு கழுதைகளுக்குத் தொழிற் சங்க அந்தஸ்து [illegible] முடியாது என் [illegible] கார் கூறி [illegible]

கிழக்கு ஜார்டனுக்கு விமான நிலையம்

அம்மான். மே 3—
ஜார்டன் நதிக்குக் கிழக்குக் கரையில் ஒருவிமானநிலையத்தை ஏற்படுத்த, பிரெஞ்சு விமானக் கம்பெனி போட்டுள்ள திட்டத்தை ஜார்டன் சர்க்கார் அங்கீகரித்திருக்கிறது. இந்த உத்தேசிக்கப்பட்டுள்ள விமான நிலையத்தில், மிகப் பெரிய விமானங்கள் கூட வந்திறங்க முடியுமாம்.

வட ஆற்காடு மாவட்ட தி. மு. கழகத் தோழர்கட்கு

வ. ஆ. மாவட்டத்தின் செயற்குழு கூட்டம் ஆரணி கணேசர் ரேடியோ நிலயத்தில் 13-5-50 சனிக்கிழமை மாலை 3-மணிக்கு நடைபெறும்.

1. மாவட்ட மாநாடு கூட்டுவதுபற்றியும்.
2. நிர்வாகஸ்தர் தேர்தெடுத்தலும் நடைபெறும்.

அங்கத்தினர்கள் யாவரும் தவறாது வர வேண்டுகிறோம்.

அன்புள்ள
சி. வே. சுப்பராயன்
செயலாளர்
மாவட்டத் தலைமை நிலயம்
திருவத்திபுரம்

வைதீக உலகுக்கோர் வெடிகுண்டு!
புரட்சியின் வளர்ச்சிக்கான போர்க்கருவி!

போர்வாள்

[திராவிடர் வார வெளியீடு]

ஆசிரியர்கள்:
காஞ்சி மணிமொழியார்
மா. இளஞ்செழியன் B.A., (Hons)

6-5-50 சனிக்கிழமை முதல்
20 பக்கங்கள் விலை அணா 2.

[சென்னையில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மாலையிலும் வெளியூர்களில் ஒவ்வொரு சனிக்கிழமையன்றும் கிடைப்பது]

* உணர்ச்சியும் எழுச்சியும் மிக்க தொடர்கதை, சிறுகதைகள்.
* இந்திய அரசியல் திட்டம் ஒரு சர்வாதிகார சாசனமே என்பதை அலசி ஆராய்ந்து விளக்கும் விறுவிறுப்பான கட்டுரைத் தொடர்.
* ஏன்—எப்படி—எதற்காக என்னும் சுவைமிக்க கேள்வி-பதில் பகுதி.
* உலகைத் திருத்திய உத்தமர்களின் வாழ்க்கை ஓவியங்கள்.
* தற்கால அரசியலை விளக்கிக்காட்டும் 'கார்ட்டூன்' படங்கள்.

மற்றும் கட்டில் சேராத கடிதம், திராவிடர் உள்ளம், காலக் கண்ணாடி முதலிய பல பகுதிகளுடன் சிறந்த முறையில் வெளி வருகிறது.

ஓராண்டு சந்தா	6 மாதம்
ரூ. 6—8—0	ரூ. 3—4—0

'போர்வாள்' அலுவலகம்
பவழக்காரத் தெரு சென்னை—1.

தாகின்நு லண்டன் செல்வார்

லண்டன், மே 3—
பர்மிய பிரதமர் தோழர் தாகின்நு எதற்காக லண்டன் வருகிறார் என்பதைப்பற்றி இங்குள்ள பர்மிய ஸ்தானிகாலயம் [illegible] ர் வகிட் [illegible]

நேச [illegible] பட்ட, வெஸ்ட் மினிஸ்டர் மாதா கோவிலில் நடைபெறவிருக்கும்பிரார்த்தனையில்தாகின்நு கலந்துகொள்வாரென தெரிகிறது.

தோழர் தாகின்நு, பிரிட்டிஷ் பிரதமர், தோழர் ஆட்லி பொருளாதார மந்திரி தோழர் கிரிப்ஸ் பாதுகாப்பு மந்திரி, இவர்களைச் சந்தித்துப் பேசுவார் எனத் தெரிகிறது. தாகின்நுவுக்கு பிரயாணத் திட்டம் இன்னும் தயாரிக்கப்படவில்லை.

ஸிரியா-இராக் வர்த்தக உடன்படிக்கை

டமாஸ்கஸ், மே 3—
ஸிரியாவுக்கும் இராக்கிற்கும் ஒரு வர்த்தக உடன்படிக்கை ஏற்படுவதற்கான பூர்வாங்க பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாகத் தெரிகிறது.

100 கள்ளிறக்குவோர்க்கு வேலை போகும்

கொழும்பு, மே 3—
கள், பட்டை, சாராயம் முதலியவைகளை ஸ்டாக் செய்ய இலங்கை சர்க்கார் கிடங்குகளில் போதிய இடவசதி இல்லாததால், கள்ளிறக்க விடப்பட்ட தென்னைமரங்களின் எண்ணிக்கைக் குறைக்கப்படும் என்றும், இதனால் கள்ளிறக்கும் வேலையில் ஈடுபட்டுள்ள சுமார் 100 தென்னிந்தியர்கள் வேறு வேலை தேடும்படியான அவசியம் ஏற்படும் என்று தெரிய வருகிறது.

இலங்கையில் கள்ளிறக்கும் தொழிலில் சுமார் 800 தென்னிந்தியர் ஈடுபட்டிருக்கின்றனராம்.

ஹாங்ஹாங்கில் கைக்குண்டு வீச்சுகள்

ஹாங்ஹாங், மே 3—
மே தினத்தன்று கைக்குண்டுகள் வீசப்பட்டது விஷயமாக ஹாங்ஹாங் போலீசார் தீவிரமாக புலன் விசாரித்து வருகின்றனர்.

ஒரு சீன லக்ஷாதிபதி நடத்தும் பத்திரிகை ஆபீஸ் மீது ஒரு குண்டு [illegible]

[illegible] தும் தெரியவருகிறது.

ஒரு கோஷ்டி கை குண்டுகளை வீசுவதில் முனைந்திருப்பதாகவும், இக்கோஷ்டியினரை கண்டுபிடித்து கொடுத்தால் 10,000 ஹாங்ஹாங் டாலர்கள் பரிசளிக்கப்படும் என்றும் ஹாங்ஹாங் சர்க்கார் அறிவித்திருக்கின்றனர். ([illegible]ரோப்)

யு. எஸ். ஸில் அரபு பிரசார பணிமனை

கெய்ரோ, மே 3—
யுனைடெட்ஸ்டேட்ஸில் அரபு விஷயங்களை பிரசாரம் செய்வதற்காக ஒரு காரியாலயத்தை ஏற்படுத்துவதென அரபு லீக் செக்ரிடேரியட் மெம்பர்கள், எகிப்திய அயல்நாட்டிலாகா அதிகாரிகள் கொண்ட கமிட்டி தீர்மானித்திருக்கிறது.

இதே மாதிரி லண்டனிலும், ஒரு காரியாலயத்தை ஏற்படுத்துவது குறித்து யோசிக்கப்பட்டு வருகிறது.

ஏற்கெனவே லண்டனிலும் வாஷிங்டனிலுமுள்ள அரபு காரியாலயங்கள் சிலகாலம் முன்பே மூடப்பட்டது நினைவிருக்கலாம்.

பிரபல சினிமா நடிகர் கைது

லாஸ் ஏஞ்ஜலிஸ், மே 3—
பிரபல சினிமா நட்சத்திரமான லோனிடப்ட்ஸ், குடிமயக்கத்தில் ரஸ்தா விதிகளை மீறி தவறான பாதையில் நடந்து சென்றதற்காக கைது செய்யப்பட்டிருக்கிறார்.

Printed & Published by T. M. Parthasarathy at the mercantile Press, 2/45, MuthuMari Chetty Street, Madras-1.